**<u>சுருக்கம்</u>**

நகராட்சி மன்றங்கள் – திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம் – நந்திவரம்–கூடுவாஞ்சேரி ஆகிய இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும்; திருவள்ளூர் மாவட்டம் – பூவிருந்தவல்லி மற்றும் திருவள்ளூர் ஆகிய முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும் மற்றும் திருவேற்காடு தேர்வு நிலை நகராட்சி மன்றத்தை சிறப்பு நிலை நகராட்சி மன்றமாகவும் தரம் உயர்த்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.49** **நாள்: 15.04.2023**

**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**சோபகிருது, சித்திரை 2**

**படிக்கப்பட்டன:**

(1) அரசாணை (நிலை) எண்.45, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 12.04.2023.

(2) நகராட்சி நிருவாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.10910/ 2023/எம்.ஏ.2, நாள் 13.04.2023.

******

**ஆணை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாக துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில், 2023–24–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது பிறவற்றுடன்,

(i) திருத்தணி மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும்;

(ii) பூவிருந்தவல்லி மற்றும் திருவள்ளூர் முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும்; மற்றும்

(iii) திருவேற்காடு தேர்வு நிலை நகராட்சி மன்றத்தை சிறப்பு நிலை நகராட்சி மன்றமாகவும் தரம் உயர்த்தப்படும் என அறிவித்துள்ளார்கள்.

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி செம்மையான நிருவாகத்திற்கென நகராட்சி மன்றங்கள், (Municipal Councils)

வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கேற்ப பல்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்படலாம். மேலும், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b)-ன்படி, முந்தைய மூன்று ஆண்டு கால சராசரி வருவாயின் அடிப்படையில் பின்வரும் வரையறைகளின்படி நகராட்சி மன்றங்கள் வகைப்படுத்தப்படலாம் (classify) என குறித்துரைக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | நிலை | ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | ரூபாய் 15 கோடிக்கு மேல் |
| 2. | தேர்வு நிலை | ரூபாய் 9 கோடிக்கு மேல் எனினும் ரூபாய் 15 கோடிக்கு மிகாமல் |
| 3. | முதல்நிலை | ரூபாய் 6 கோடிக்கு மேல் எனினும் ரூபாய் 9 கோடிக்கு மிகாமல் |
| 4. | இரண்டாம் நிலை | ரூபாய் 6 கோடிக்கு மிகாமல் |

3. நகராட்சி நிருவாக இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது செயற்குறிப்பில், திருத்தணி, நந்திவரம்-கூடுவாஞ்சேரி, பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மற்றும் திருவேற்காடு ஆகிய நகராட்சிகளின் ஆணையர்கள் தணிக்கை செய்யப்பட்ட வருமான விவரங்கள் மற்றும் தொடர்புடைய மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையிலும் அந்நகராட்சிகளின் நிலையை பின்வருமாறு உயர்த்தலாம் என பரிந்துரை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், இச்செயற்குறிப்புகளை நகராட்சி நிருவாக செங்கல்பட்டு மண்டல இயக்குநர் பரிந்துரைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

| வ. எண். | நகராட்சி மன்றங்கள் | தற்போதைய நிலை | தரம் உயர்த்தப்படும் நிலை |
|---|---|---|---|
| 1. | **திருத்தணி** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 2. | **நந்திவரம்-கூடுவாஞ்சேரி** | இரண்டாம் நிலை | **முதல் நிலை** |
| 3. | **பூவிருந்தவல்லி** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 4. | **திருவள்ளூர்** | முதல் நிலை | **தேர்வு நிலை** |
| 5. | **திருவேற்காடு** | தேர்வு நிலை | **சிறப்பு நிலை** |

4. மேலும், நகராட்சி நிருவாக இயக்குநர், நந்திவரம்-கூடுவாஞ்சேரி இரண்டாம் நிலை நகராட்சியின் தற்போதைய மூன்றாண்டு சராசரி வருமானம் ரூ.11.31 கோடியாக உள்ளதாகவும், இந்நகராட்சியானது தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்திட தகுதி பெற்றிருப்பினும் சமீபத்தில் பேரூராட்சி நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, தற்போதைய நிலையில் இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் நிலையில் ஊதிய செலவினம் மற்றும் பராமரிப்பு செலவினங்களை எதிர் கொள்வது சிரமமாகும் என்பதால், நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

5. அதேபோன்று, பூவிருந்தவல்லி மற்றும் திருவள்ளூர் ஆகிய முதல் நிலை நகராட்சிகளின் மூன்றாண்டு சராசரி வருமானம், முறையே, ரூ.18.86 கோடி மற்றும் ரூ.18.29 கோடியாக உள்ளதாகவும், இவ்விரண்டு நகராட்சிகளும் சிறப்பு நிலை நகராட்சிக்கான வருமான தகுதியினை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டு, (ரூ.15 கோடிக்கு மேல்) இருப்பினும், தற்போதைய நிலையில், இவ்விரண்டு நகராட்சிகளும் சிறப்பு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் நிலையில், ஊதிய செலவினம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அதிகரிக்கக் கூடும் என்பதால், பூவிருந்தவல்லி மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு நகராட்சிகளும் முதல் நிலையிலிருந்து தற்போது தேர்வு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படலாம் என நகராட்சி நிருவாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

6. மேலும், திருவேற்காடு நகராட்சியின் மூன்றாண்டு சராசரி வருமானம் ரூ.35.12 கோடியாக இருப்பதனால், சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் நிலையில், நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையிலான பணியாளர்களுக்குரிய செலவினம் மற்றும் பராமரிப்பு செலவினங்களை மேற்கொள்ள இயலும் என்பதால், திருவேற்காடு நகராட்சியை தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தலாம் எனவும் நகராட்சி நிருவாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு மற்றும் 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b)–ன்படி, திருத்தணி, நந்திவரம்–கூடுவாஞ்சேரி, பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மற்றும் திருவேற்காடு ஆகிய நகராட்சிகளின் நிலையை பின்வருமாறு உயர்த்தலாம் என நகராட்சி நிருவாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண். | நகராட்சி மன்றங்களின் பெயர் | தற்போதைய நிலை | தரம் உயர்த்தப்படும் நிலை |
|---|---|---|---|
| 1. | திருத்தணி | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 2. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி | இரண்டாம் நிலை | முதல் நிலை |
| 3. | பூவிருந்தவல்லி | முதல் நிலை | தேர்வு நிலை |
| 4. | திருவள்ளூர் | முதல் நிலை | தேர்வு நிலை |
| 5. | திருவேற்காடு | தேர்வு நிலை | சிறப்பு நிலை |

8. அரசு, நகராட்சி நிருவாக இயக்குநரின் செயற்குறிப்பை கவனமான பரிசீலனைக்கு பின்னர் ஏற்று, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு மற்றும் 2023 ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b) ஆகியவற்றின் கீழ்,–

(i) திருத்தணி மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்களை முதல் நிலை நகராட்சி மன்றங்களாகவும்;

(ii) பூவிருந்தவல்லி மற்றும் திருவள்ளூர் முதல் நிலை நகராட்சி மன்றங்களை தேர்வு நிலை நகராட்சி மன்றங்களாகவும்; மற்றும்

(iii) திருவேற்காடு தேர்வு நிலை நகராட்சி மன்றத்தை சிறப்பு நிலை நகராட்சி மன்றமாகவும் வகைப்பாடு (classify) செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

9. இதனடிப்படையில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் விதி 3 (1) (b) ஆகியவற்றின் கீழ், இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை 15.04.2023 ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிருவாக இயக்குநர். சென்னை – 600 028.
மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு/திருவள்ளூர்.
ஆணையர், திருத்தணி/நந்திவரம்–கூடுவாஞ்சேரி/பூவிருந்தவல்லி/திருவள்ளூர் மற்றும் திருவேற்காடு நகராட்சிகள்
செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிருவாக இயக்குநர்,
**நகல்:**
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
சட்டத்துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை – 600 009.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

**APPENDIX.**

**NOTIFICATION.**

In exercise of the powers conferred by sub-section (4) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), read with Clause (b) of sub-rule (1) of rule 3 of the Tamil Nadu Urban Local Bodies Rules, 2023, the Governor of Tamil Nadu hereby classifies each of the Municipal Council specified in column (2) of the Table below into that of the Grade specified in the corresponding entry in column (4) thereof:—

**THE TABLE.**

| Sl. No. | Name of the Municipal Councils | Name of the district | Grade |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Tiruthani | Thiruvallur | First |
| 2. | Nandhivaram-Guduvancheri | Chengalpattu | First |
| 3. | Poonamallee | Thiruvallur | Selection |
| 4. | Thiruvallur | Thiruvallur | Selection |
| 5. | Thiruverkadu | Thiruvallur | Special |

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**Section Officer.**